# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.159/2024 | Date | : 08.09.2025 |
| Deposition of Witness for | : அ.சா.2 | Taluk | : |
| Name | : ராஜா | Calling | : |
| Father Name | : பெருமாள் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 08.09.2025.

(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், ஐவேலி கிராமத்தில் வசித்து லாரி பட்டறையில் வேலை செய்து வருகிறேன். சுமார் 02 வருடங்களுக்கு முன்பாக மாலை சுமார் 06.00 மணியளவில் பச்சப்பட்டி, கவுண்டர் தெருவில் கூட்டமாக இருந்தது. நான் சென்று பார்த்தபோது, பழனியம்மாள் என்பவரின் மீது இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டிருந்தது. அவருக்கு காலிலும், கையிலும் அடிப்பட்டிருந்தது.

2) அந்த இருசக்கர வாகனத்தை யார் ஓட்டிவந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்களா என்று எனக்கு ஞாபகமில்லை.

**(சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

ஆஜர் எதிரி எனது பக்கத்து வீட்டுக்காரர் என்றால் சரிதான். அவர் இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து பழனியம்மாள் என்பவரின்மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்று போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது ஆஜர் எதிரி பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் பிறழ் சாட்சியாக மாறி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

Sd/-S.Sathiya,

Sd/-Raja

Judicial Magistrate No.1,
Sankari.